**<u>முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், சேலம்</u>**

**முன்னிலை :** திருமதி. K. அம்பிகா, B.A., B.L.,
முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
சேலம்

**2025–ஆம் வருடம் அக்டோபர் மாதம் 22 ஆம் தேதி புதன்கிழமை**

**<u>அமர்வு வழக்கு எண்.142/2019</u>**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சேலம்

(முதல்நிலை பதிவேடு வழக்கு எண்.15/2018)

| | |
|---|---|
| 1. குற்றமுறையீட்டாளர் பெயர் | காவல் ஆய்வாளர்,<br>சேலம் இரும்பாலை காவல்நிலையம்,<br>குற்ற எண்.430/2017. |
| 2. எதிரிகளின் பெயர் | 1. லட்சுமனன், த/பெ. தங்கவேல்.<br>2. கோவிந்தராஜ், த/பெ. செல்லப்பன்.<br>3. சபாபதி, த/பெ. பூபதி.<br>4. சீனிவாசன், த/பெ.வெங்கடாஜலம். |
| 3. சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு | 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294 (b), 506 (2), 352 மற்றும் 3 (1) TNPPDL Act 1984. |
| 4.வனையப்பட்ட குற்றச்சாட்டு | 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 294 (b), 323, 324, 506 (2), மற்றும் 3 (1) of TNPPDL Act. |
| 5. எதிரிகளின் கோரிக்கை | குற்றவாளிகள் இல்லை. |
| 6. நீதிமன்ற முடிவு | குற்றவாளிகள் இல்லை. |
| 7. தீர்ப்புரை | முடிவில், எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 294 (b), 323, 324, 506 (2), மற்றும் 3 (1) of TNPPDL Act–ன் படியும் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து எதிரிகள் குற்றவாளி இல்லை என்று கு.வி.மு.ச. பிரிவு 235 (1)–ன் கீழ் முடிவு செய்து எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் |

| | |
|---|---|
| | எழுதிக் கொடுத்துள்ள பிணைபத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட, C.P.No.31/2024 ல் கண்ட சிறிய கருங்கல் ஒன்று சுமார் 2 அடி நீலமுள்ள தடி ஒன்று, உடைந்த பூந்தொட்டியின் துண்டுகள் மற்றும் உடைந்த மர டேபில் கட்டையின் துண்டுகள் எதற்கும் பயன்படாது என்பதால் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த அமர்வு வழக்கு என் முன்பாக 09.10.2025–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு. எல். அசோக்குமார் ஆஜராகியும், 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் திரு.S.R.நரசிம்மன், வழக்கறிஞர் ஆஜராகியும், வழக்கில் இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**தீர்ப்புரை**

இவ்வழக்கு இரும்பாலை காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294 (b), 506 (2), 352 மற்றும் 3 (1) TNPPDL Act 1984 ன் கீழ் சமர்ப்பித்த குற்ற இறுதி அறிக்கையின் படி ஏற்பட்ட அமர்வு வழக்காகும்.

2. **குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:**

1 முதல் 4 எதிரிகள் பாட்டாளி மக்கள் கட்சியை சார்ந்தவர்கள் என்றும் சாட்சி அருள் முருகன் 3 வருடங்களாக பாட்டாளி மக்கள் கட்சியில் மாவட்ட செயலாளராக இருந்தார் என்றும் 1 முதல் 4 எதிரிகளுக்கு அரசியல் ரீதியாக

சாட்சி அருள் முருகன் மீது முன் விரரோதம் இருந்தது. கடந்த 22.12.2017ம் தேதி இரவு 09.20 மணிக்கு சாட்சி அருள் முருகன் தனது பாரதி மொபைல்ஸ் கடையில் இருந்தபோது 1 முதல் 4 எதிரிகள் குடிபோதையில் கடைக்குள் நுழைந்து அருள் முருகனிடம் வாய் சண்டை செய்து அப்போது கடைக்கு கைபேசிக்கு ரீசார்ச் செய்ய வந்த சாட்சி பிராசத்தை 2 மற்றும் 3 எதிரிகள் சத்தம் போட்டு கடைக்கு முன்பாக நின்று கொண்டிருந்த 1 மற்றும் 4 எதிரியிடம் இழுத்து வந்து சண்டையிட்டு 3ம் எதிரி சாட்சி பிராசத்தை கையால் முதுகிலும் 2ம் எதிரி காலால் இடுப்பிலும் 1ம் எதிரி கல்லால் முதுகிலும் 4ம் எதிரி குச்சியால் முதுகிலும் அடித்து, 1 முதல் 4 எதிரிகள் சாட்சி பிராசத்தை ஆபாச வார்த்தைகளால் திட்டி தரையில் உட்கார வைத்து மீண்டும் 1 முதல் 4 எதிரிகள் சாட்சி பிராசத்தை கையால் அடித்தும் காலால் உதைத்தும் சாதாரண காயத்தை ஏற்படுத்தி அங்கு கூடியிருந்த பொதுமக்கள் பிராசத்தை காப்பாற்ற முயன்றபோது எதிரிகள் கல் மற்றும் குச்சியை காட்டி இன்னிக்கு தப்பிச்சிகிட்ட என்னைக்கா இருந்தாலும் உன்னையும் உன் குடும்பத்தையும் கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்து சாட்சி அருள் முருகனும் கடைக்கு முன்பாக இருந்த பூந்தொட்டி, மேஜை, இருப்பு கதவு உடைத்து அருள் முருகனுக்கு ரூபாய் இரண்டாயிரம் நஷ்டம் ஏற்படுத்திய குற்றசெயலுக்காக எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294 (b), 352, 506 (ii) மற்றும் பிரிவு 3 (1) TNPPDL Act படியும் இரும்பாலை காவல்நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி குற்ற இறுதி அறிக்கையின் பேரில் அமைந்த எதிரிகள் மீதான வழக்கு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதை அறிந்து, சேலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களால் முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.15/2018–ல் வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள்

நீதிமன்றத்தில் தோன்றிய பின்பு, வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207−ன் கீழ் எதிரிகளிடம் இலவசமாக வழங்கப்பட்டு, சேலம் மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கு கோப்பு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டு அது பற்றி விவரம் எதிரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

4. மேற்படி வழக்குக் கோப்பு மாண்புமிகு சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.142/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

5. வழக்கு கோப்புகள் இந்நீதிமன்றத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி, இந்நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜராகியிருந்த நிலையில், இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்களைப் பரிசீலித்த வகையில், எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைவதற்குப் போதுமான முதல்நிலை மற்றும் மேல்நோக்கு ஆதாரங்கள் இருந்ததால் எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 294 (b), 323, 324, 506 (2), மற்றும் 3 (1) of TNPPDL Act−ன் படி குற்றச்சாட்டு வனையப்பட்டு தமிழில் விளக்கிக் கூறி, எதிரிகளிடம் வினவிய போது எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று கூறி குற்றச்சாட்டினை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

7. **<u>அரசு தரப்பு வழக்கின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:</u>**

அ.சா.1 திரு.அருள் முருகன் இரும்பாலையில் போன் கடை வைத்துள்ளேன். சுமார் 7,8 வருடத்திற்கு முன்பாக இரவு 8, 9 மணிக்கு 10 பேர் கூட்டமாக எனது கடைக்கு பொருள் வாங்க வந்தார்கள். அந்த பொருள் இல்லை. பின்பு அவர்களுக்குள் தள்ளுமுள்ளு ஆகி சண்டை செய்துக்கொண்டார்கள், கடையில்வெளியில் வைத்திருந்த 2, 3 பொருளை அடித்து சேதாரம் செய்துவிட்டார்கள். அவர்கள் யார் என்று பெயர் தெரியாது. ஆஜர் எதிரிகளா என்றால் இல்லை. இரவு பேட்ரலுக்கு வரும் போலிசாருக்கு விசயம் தெரிந்து கேட்டார்கள். காவல்நிலையம் வரச்சொல்லி நான் போனேன். அங்கு கையெழுத்து கேடடார்கள் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் கையெழுத்து என்னுடையதுதான். அதில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.2 திரு.செல்வம் தறி ஓட்டும் வேலை செய்து வருகிறேன். அசா – 1 தெரியும். அசா–1 கடைக்கு போவேன் அதனால் அவரை தெரியும், என்ன சம்பவம் நடந்து என்று தெரியாது. நான் அவர் கடைக்கு போனபோது போலிசார் அங்கு இருந்தார்கள். என்னிடம் முகவரி மட்டும் கேட்டார்கள் நான் சொன்னேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.3 திரு.வெங்கடாஜலம் சென்டரிங் வேலை செய்து வேலை செய்து வருகிறேன். அசா–1 தெரியும். அசா–1 கடைக்கு போவேன் அதனால் அவரை தெரியும், என்ன சம்பவம் நடந்து என்று தெரியாது. நான் அவர் கடைக்கு போனபோது போலிசார் அங்கு இருந்தார்கள். என்னிடம் முகவரி மட்டும் கேட்டார்கள் நான் சொன்னேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்திருக்கிறார்.

10. அ.சா.5 திரு.பிரசாத் டிரைவராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. புகார்தாரர் அருள் முருகனை தெரியும். எதிரிகள் என்னை அடிக்கவில்லை. வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. அ.சா 1 க்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்ததாக மட்டும் கேள்விபட்டேன் ஆனால் சம்பவ இடத்தில் நான் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்திருக்கிறார்.

11. அ.சா.1 முதல் 3 மற்றும் 5 சாட்சியங்களும் அரசு தரப்புக்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

12. அ.சா.4 திரு.ரஜினி – காவல் ஆய்வாளர் கடந்த 23.12.2017 ம் தேதி சேலம் மாநகரம் இரும்பாலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது மாரமங்களத்துப்பட்டி மோகன் நகரை சேர்ந்த கருமலை மகன் அருள்முருகன் நிலையம்ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.430/2017, சட்டப்பிரிவுகள் 294( b), 323, 324, 506(2) இ.த.ச மற்றும் சட்டப்பிரிவுகள் 3(1) TNPPDL Act ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் புலன்விசாரணைக்காக காலை 07.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகள் அன்புமணி மற்றும் முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்ததாகவும் தாக்கல் செய்தேன் என்றும் சட்சியம் அளித்திருக்கிறார்.

13. மேலும் அவர் 10.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் இவ்வழக்கின் சேதரப்படுத்தப்பட்ட வழக்கு சொத்துக்களை உடைந்த பூந்தொட்டி ஒன்று, உடைந்த மர டேபிள் ஒன்று ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், இவ்வழக்கின் புகார்தாரரர் அருள்முருகன் மற்றும் சாட்சிகள் செல்வம், வெங்கடாசலம் விசாரித்து தனித்தனியே

வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், எதிரிகளை தேடிவந்த நிலையில் மாரமங்களத்துபட்டி பஸ் நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்த எதிரி சீனிவாசன் என்பவரை சாட்சிகள் அடையாளம் காட்ட கைதுக்கான காரணம் கூறி பகல் 12.15 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து முறைப்படி திரேக சோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்புவித்தும், நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன் என்றும், மற்ற எதிரிகளை தேடிவந்த நிலையில் 29.12.2017 ஆம் தேதி எதிரி–1 லட்சுமணன், எதிரி–2 கோவிந்தராஜ் மற்றும் சபாபதி ஆகிய மூவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றிருந்ததால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வழக்கு சொத்து எண். 209/2018 பெறப்பட்டது என்றும், பின்னர் இவ்வழக்கின் சொத்தான பூந்தொட்டியின் மதிப்பீடு சான்று வழங்கிய கிருஷ்ணன் என்பவரையும், உடைந்த மர டேபிளுக்கு சேத மதிப்பு சான்று வழங்கிய நாகராஜ் என்பவரையும் தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் குற்ற வழக்கு தொடர்பு துறை துணை இயக்குநர் அவர்களை சந்தித்து இவ்வழக்கின் கருத்துரை பெற்று சட்டப்பிரிவு 294(b), 323, 324, 506(2) IPC r/w 3(1) TNPPDL Act லிருந்து 294(b), 352, 506(2) IPC r/w 3(1) TNPPDL Act ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து எதிரிகள் நால்வர் மீதும் 18.06.2018 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

14. அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.5 உடன் முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ) ன் கீழ் எதிரிகளிடம் வினவிய போது எதிரிகள் அவற்றை பொய் என்றும், தான் குற்றவாளிகள் இல்லை என்றும் கூறினார். எதிரிகள்

தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

15. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

16. தற்போது இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதா (அ) இல்லையா என்பதேயாகும்.

17. **<u>தீர்வு</u>**:

அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகள் 1 முதல் 3 மற்றும் 5 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறிய போதிலும், அ.சா.4, சாட்சியமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 ஆவணங்களின் மூலமாக எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக வாதிட்டார்.

18. எதிரிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் புகார்தாரர் தனது குறுக்குவிசாரணையில் புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளும், ஆவணங்களும் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க போதுமானதாக இல்லையென்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று கருதி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

19. இவ்வழக்கில் அரசு தரப்பில் புகார்தாரர் அ.சா.1 ஆகவும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்யாக அ.சா.2, 3 மற்றும் 5 ம் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கின் புகார் தாரரான அ.சா.1 தன்னுடைய புகாரில் "புகார்தாரர் வீட்டின் முன் பகுதியில் பாரதி மொவைல்ஸ் என்ற பெயரில் செல்போன் கடை வைத்து நடத்தி வருகிறேன்.

மேலும் பாட்டாளி மக்கள் கட்சியில் கடந்த 3 வருடங்களாக வடக்கு மாவட்ட தொழிற்சங்க செயலாளர் பதவியில் இருந்து வருகிறேன். எனக்கும் பாட்டாளி மக்கள் கட்சியில் வடக்கு மாவட்ட துணை செயலாளர் பதவியில் உள்ள கீரைப்பாப்பாம்பட்டி சேர்ந்த தங்கவேல் மகன் லட்சுமணன் என்பவருக்கும் கட்சி ரீதியாக கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. அன்று 22.12.2017ம் தேதி இரவு சுமார் 09.20 மணிக்கு நானும் எனது மாமா வெங்கடாஜலம் மகன் மணி என்பவரும் கடையின் உள்ளே உட்கார்ந்து இருந்தோம், அப்போது முருங்கப்பட்டியை சேர்ந்த செல்லப்பன் மகன் கோவிந்தராஜ் மற்றும் அதே ஊரை சேர்ந்த பூபதி மகன் சபாபதி ஆகிய இருவரும் குடிபோதையில் கடையின் உள்ளே வந்து என்னிடம் கட்சியில் நீ என்ன பெரிய ஆளா நீ எந்த பதவியில் இருந்தாலும் இந்த ஏரியாவில் நாங்களும் லட்சுமணனும் சொல்லறதை தான் கேட்கனும் எங்களை எதிர்த்தால் நீயும் உன் குடும்பமும் உயிரோடு இருக்க முடியாது என்று மிரட்டினார்கள். அதற்கு நான் நீங்கள் குடிபோதையில் இருக்கிறீர்கள் எதுவாக இருந்தாலும் நாளை பேசி கொள்ளலாம் போங்கள் என்று கூறினேன். அப்போது கணபதிபாளையம் பகுதியை சேர்ந்த பிரசாத் என்பவர் ரீசார்ஜ் செய்ய கடைக்குள் உள்ளே வந்தார். அவரிடமும் நீ என்ன இந்த ஏரியாவில் பெரிய தாதாவா என்று அவரிடமும் தகராறு செய்தார்கள். பிறகு அவரை போவிந்தராஜூம், சபாபதியும் கடைக்கு வெளியே இழுத்து கொண்டு சென்றார்கள் நான் எழுந்து அவர் பின்னாடியே சென்றேன். வெளியே இழுத்து வந்த பிரசாத்தை, சபாபதி கைகளால் பிரசாத்தின் முதுகுமீது அடித்தார். கோவிந்தராஜ் பிரசாத்தின் இடுப்பின் மீது எட்டி உதைத்தார்கள். லட்சுமணன் கீழே கடந்த கல்லை எடுத்து பிரசாத்தின் தலை, முதுகு ஆகிய இடங்களில் கல்லால் குத்தினார். சீனி என்பவர் கீழே கடந்த தடியை எடுத்து பிரசாத்தின் முதுகு மீது அடித்தார். பிறகு பிராசாத்தை கீழே உட்கார சொல்லி மேற்படி நான்கு பேரும் சேர்ந்து தேவிடியா பையா எழுந்தா கொண்ணுடுவோம் என்று சொல்லி கைகளால்

அடித்தும் காலால் எட்டியும் உதைத்தார்கள். பிறகு என் கடையின் முன் வைத்திருந்த பிளவர் தொட்டி செடிகளில் நான்கை எடுத்து கீழே போட்டும் உடைத்தனர். கடையின் முன்பு வைத்து இருந்த மரடேபுளையும் தூக்கிபோட்டு உடைத்தார்கள். கடைக்கு எதிரே உள்ள எனது காய்கறிகடையின் செட்டின் இரும்பு கதவை கல்லை தூக்கி போட்டு சேதப்படுத்தினார்கள். அப்போது நான் சத்தம்போடவே எங்கள் பக்கத்து வீட்டில் உள்ள சுந்தர்ராஜ், சின்ன பூசாலியூரை சேர்ந்த செல்வம் எனது மாமா வெங்கடாஜலம் அகியோர் ஓடி வந்தார்கள். அவர்களை பார்க்க மேற்படி நான்கு பேரும் என்னைபார்த்து தேவிடியா மவனே இன்னைக்கு தப்பிச்சிகிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னையும் உன் குடும்பத்தையும் கொல்லாமல் விட மாட்டோம் என்று சொல்லி லட்சுமணனும் சீனியும் தன் இடுப்பில் இருந்து கத்தியை எடுத்து காட்டி மிரட்டினார்கள். கோவிந்தராஜ் மற்றும் சபாபதி இருவரும் ஆளுக்கொரு அறிவாளை காட்டி அறுத்துருவோம் என்று மிரட்டி விட்டு அவர்கள் வந்த இரண்டு இருசக்கர வாகனங்களில் சென்றுவிட்டார்கள் சேதப்ப்டுத்தப்பட்ட எனது பொருள்களின் மதிப்பு சுமார் 2000 ரூபாய் இருக்கும். மேற்படி சம்பந்தப்பட்ட ஆட்களை அழைத்து வந்து எனக்கு கொலைமிரட்டல் மற்றும் பொருட்களை சேதப்படுத்தியும் லட்சுமணன் மற்றும் அடியாட்கள் மூன்று பேர்மீதும் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோன்" என்று சொல்லியுள்ளார்.

20. ஆனால் அ.சா.1 தன்னுடைய நீதிமன்ற விசாரணையில் புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு முரணாக சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பாக இரவு 8, 9 மணிக்கு 10 பேர் கூட்டமாக எனது கடைக்கு பொருள் வாங்க வந்தார்கள் எனவும் அந்த பொருள் இல்லை என்பதால் அவ்ர்களுக்குள் தள்ளு முள்ளு ஆகி சண்டை செய்து கொண்டு கடைக்கு வெளியில் வைத்திருந்த 2, 3 பொருட்களை அடித்து சேதாரம்

செய்துவிட்டார்கள் என்றும் அவர்கள் யார் என்று பெயர் தெரியாது ஆஜர் எதிரிகளா என்றால் இல்லை என்றும் இரவு பேட்ரோலுக்கு வரும்போது போஸீசாருக்கு விசயம் தெரிந்து காவல் நிலையம் வரசொல்லி கையெழுத்து கேட்டார்கள் என்று அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றும் போஸிசார் விசாரிக்க வில்லை என்றும் அரசுதரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தின்போது எதிரிகள் அடித்ததாக விசாரிகக்ப்பட்டுள்ள அ.சா.5ம் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது என்றும் எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றும் சம்பவத்திப்பற்றி எனக்கு எதுவும தெரியாது என்றும் சம்பவஇ டத்தில் நான் இல்லை என்றும் போஸிசார் விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்வு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 மற்றும் 3 என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது போஸிசார் தன்னிடம் முகவரி மட்டும் கேட்டு எழுதிகொண்டார்கள் போஸிசார் தன்னை விசாரிக்கவில்லை என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4ம் அ.சா.1 முதல் 3 மற்றும் 5ன் பிறழ் சாட்சியம் குறித்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் சம்பவத்தால் அ.சா.5க்கு காயம் ஏற்பட்டது என்பதற்கான மருத்துவ ஆவணங்களை புலன் விசாரணை அதிகாரி நீதிமன்ற்த்தில் தாக்கல் செய்யவில்லை. ஆகையால் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரிகளை குற்றவாளிகள் என் இந்நீதிமன்றம் கருத இயலாது. ஆகையால் எதிரிகள் தான் சம்பவ குற்றசெயலில் ஈடுபட்டார்கள் என்பதை குறித்து சந்தேகத்திற்கு அப்பாற்பட்டடு நிருபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. ஆகையால் மேலே விவாதிக்கப்பட்ட வகையில் அரசு தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி

நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் இ.த.ச பிரிவு 294 (b), 323, 324, 506 (2), மற்றும் 3 (1) TNPPDL Act–ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து எதிரிகள் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 294 (b), 323, 324, 506 (2), மற்றும் 3 (1) of TNPPDL Act–ன் படியும் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து எதிரிகள் குற்றவாளி இல்லை என்று கு.வி.மு.ச. பிரிவு 235 (1)–ன் கீழ் முடிவு செய்து எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணைபத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட, C.P.No.31/2024 ல் கண்ட சிறிய கருங்கல் ஒன்று சுமார் 2 அடி நீலமுள்ள தடி ஒன்று, உடைந்த பூந்தொட்டியின் துண்டுகள் மற்றும் உடைந்த மர டேபில் கட்டையின் துண்டுகள் எதற்கும் பயன்படாது என்பதால் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025–ஆம் வருடம் அக்டோபர் மாதம் 22–ஆம் தேதியன்று அவையறிய பகரப்பட்டது.

(Sd./ K.Ambiga)
முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
சேலம்.

**<u>பிற்சேர்க்கை:</u>**

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:

அ.சா.1 – திரு.அருள் முருகன்.

அ.சா.2 – திரு.செல்வம்.

அ.சா.3 – திரு.வெங்கடாஜலம்.

அ.சா.4 – திரு.ரஜினி. காவல் ஆய்வாளர்.

அ.சா.5 – திரு.பிரசாத்.

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள புகார்தாரர் கையெப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | கைபற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.7 | Form 91 |
| அ.சா.ஆ.8 | சேத மதிப்பு சான்று |
| அ.சா.ஆ.9 | சேத மதிப்பு சான்று |
| அ.சா.ஆ.10 | திருத்தப்பட்ட அறிக்கை |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>** குறியீடு செய்யப்படவில்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>** **– இல்லை**
**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>** **– இல்லை**

(Sd./ K.Ambiga)
முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
சேலம்